*கவனிக்க.- 2017.10.13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2042 - 2017 ඔක්තෝබර් මස 20 වැනි සිකුරාදා - 2017.10.20**

*2042 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1592 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1599 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 1602 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2017, நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1591 - B81219 - 5,568(2017/10)

# பதவிகள் – வெற்றிடம்

## நாவுல பிரதேச சபை

நாவுல பிரதேச சபையிலே கீழே குறிப்பிடப்படும் சுகாதார தொழிலாளி III ஆம் வகுப்பு பதவிக்கு ஆட்கள் சேர்த்துக்கொள்வதற்கான உரிய தகைமைகளையுடைய நாவுல பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத் அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | சுகாதார தொழிலாளி III | 03 | பொ.நி.சு.3/2016(II) ஏற்ப PL - 1- 2016 ரூபா 24,250-10X250-10X270-10X300- 12X330- ரூபா 36,140 | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் 2 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அதில் 5 பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>மேலே குறித்த தகைமைகளை கொண்ட விண்ணப்பதாரிகள் இல்லாத விடத்து 5 ஆம் வகுப்பு சித்தி பெற்றோர் தொடர் பாக கவனத்திற் கொள்ளப்படும். |

**1. சேர்த்துக்கொள்வதற்கான ஏனைய பொதுத் தகைமைகள் மற்றும் நிபந்தனைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். சிறந்த குணநலத்தைக் கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி நாவுல பிரதேச சபை எல்லைக்குள் 3 வருடத்திற்கு குறையாத நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பதாரி சிறந்த கண்பார்வை உள்ளவராகவும் நல்ல தேகாரோக்கியத்தை கொண்டவராகவும் மற்றும் சிறந்த மனோ நிலை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(iv) விண்ணப்பதாரி குற்றவியல் கோவையின் கீழ் நீதிமன்றமொன்றினால் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளியாக இருத்தல் கூடாது.

(v) விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(vi) குறித்த பதவி வெற்றிடங்களுக்கு நாவுல பிரதேச சபை எல்லைக்குள் தகுதியானவர்கள் இல்லாதவிடத்து அண்மித்த பிரதேச சபை பிரதேசங்களில் வசிப்பவர்களிடமிருந்து தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து பதவிகளுக்கும் சேர்த்துக் கொள்ளல் நாவுல பிரதேச சபை செயலாளரினால் மேற்கொள்ளப்படும்.

**2. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியமுடையதுமாகும். தெரிவு செய்யப்படுபவர்கள் விதவைகள், அநாதைகள் நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) நியமனத்திகதியிலிருந்து 3 வருட காலத்திற்கு தகுதிகாண் காலத்திற்குற்பட்டதாகும்.

(iii) இந்த ஆட்சேர்த்தல் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தாபனவிதிக் கோவையின் நிபந்தனைகள், மாகாண சபையின் நிதி நிபந்தனைகள், கௌரவ ஆளுநரின் கட்டளைகள், மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் நிபந்தனைகள் மற்றும் ஏற்பாடுகள், உள்ளூராட்சி மன்றத்தின் கட்டளைச் சட்டங்கள் மற்றும் ஏற்பாடுகள், நாவுல பிரதேச சபையினால் விடுக்கப்படும் நிபந்தனைகள் மற்றும் ஏற்பாடுகளுக்கு கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.

3. இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்துக்கு அமைவாக 12" X 8" அளவு கொண்ட கடதாசியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியான 2017.11.14 ஆந் திகதிக்கு கிடைக்கக் கூடியதாக 'செயலாளர், நாவுல பிரதேச சபை' என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியவகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பப்பத்திரம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

4. விண்ணப்பப்பத்திரத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளும் அனுப்பப்படல் வேண்டும்:-

(i) பிறப்பு அத்தாட்சிப்பத்திர பிரதி;
(ii) கல்விச் சான்றிதழ் பிரதி;
(iii) பிரதேச செயலாளர் மேலொப்பமிட்ட கிராம அலுவலரிடமிருந்து அண்மையில் பெற்றுக்கொண்ட வதிவிடச் சான்றிதழ்;
(iv) சமீபத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட 2 குணநலச் சான்றிதழ்;
(v) தேசிய ஆள்அடையாள அட்டைப் பிரதி.

விண்ணப்பப்பத்திரம் கோரப்பட்டதன் பின்பு அல்லது கோரப்படும் சந்தர்ப்பத்தில் இந்த ஆட்சேர்த்தலை பிற்போடுதல் அல்லது மாற்றம் செய்தல் இந்த அறிவித்தலை இரத்துச் செய்தல் அல்லது திருத்துதல் போன்றவற்றுக்கான அதிகாரம் நாவுல பிரதேச சபை செயலாளருக்கு உண்டு.

ஜீ. எச். எம். உபுல் பிரியதர்சன,
செயலாளர்,
நாவுல பிரதேச சபை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகான அரச சேவையில் சுகாதார தொழிலாளி III ஆம் வகுப்பு பதவிக்கான விண்ணப்பம்**

1. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) : ..............................................................................................
.................................................................................................................................................

2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் : ..............................................................................
.................................................................................................................................................

3. நிரந்தர முகவரி : .................................................................................................................

4. பிரதேச செயலாளர் பிரிவு : ......................................................................................................

5. தொலைபேசி இலக்கம் : ............................................................................................................

6. நாவுல பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரவதிவுக்காலம் : ...........................................................................

7. பிறந்த திகதி :- ஆண்டு .................... மாதம் ............................................ திகதி ......................................................

8. தேசிய ஆள்அடையாள அட்டை இலக்கம் : ..........................................................................................

9. 2017.10.01 ஆம் திகதிக்கு வயது, வருடங்கள் : ................................. மாதங்கள் ............................. நாட்கள் ................................

10. பால் (ஆண்/பெண்) : ..................................................................................................................

11. சிவில் அந்தஸ்து: .....................................................................................................

12. தேசியஇனம்: ..........................................................................................................................

13. இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் வம்சாவழியிலா/பதிவு மூலமா? ..........................................................................

14. கல்வித் தகைமைகள் : க.பொ.த. (சா./த.)

| தொடர் இல. | பாடம் | தரம் | தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9 | | |
| 5. | | | 10. | | |

க.பொ.த. (உ./த.)

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

15. தொழில் அனுபவம் மற்றும் தொழிற் தகைமைகள் : ..........................................................................................................................

இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் சரியானவையெனவும் உண்மையானவையெனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு தரப்பட்டிருக்கும் விபரங்கள் பொய்யானதென அந்நியமனத்திற்கு முன்னர் தெரியவரின் தகுதியற்றவரெனவும் நியமனத்திற்குப் பிறகு தெரியவரின் பதவி நீக்கத்திற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

.......................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : .....................................................

10-657

---

## மத்திய மாகாண அரச சேவையில் உக்குவளை பிரதேச சபையில் சாரதி பதவிக்காக ஆட்களை சேர்த்தல்

மத்திய மாகாண அரச சேவையில், உக்குவளை பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள சாரதிகளுக்கான பதவிகளுக்காக ஆட்களை நியமிக்க வேண்டியுள்ளது. அதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளபடி தகுதி உள்ளவர்களும், உக்குவளை பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்களிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (உக்குவளை பிரதேச சபையின் தற்போது நிரந்தர, அமய மற்றும் பதில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

| பதவிப் பெயர் | வெற்றிடமுள்ள பதவிகளின் எண்ணிக்கை | சம்பள முறை | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் |
|---|---|---|---|
| சாரதிகள் | 02 | சம்பளக் குறியீட்டு இல. PL -3 அ. நி. சு. 3/2016 க்கு ஏற்ப சம்பளம் ரூ. 25,790-10x270-10x300-10x330-12x350-ரூ. 38,990<br>அ. நி. சு. இல் அநுபந்தம் 11 படி சம்பளம் வழங்கப்படும். (நான்காவது சம்பள அதிகரிப்புக்கு முன் தடை தாண்டில் பரீட்சை ஒன்றுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் | கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் குறைந்த பட்சம் 02 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தி யடைந்து இருக்க வேண்டும். அதில் ஒரே தடவையில் 05 பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். |

2. **தொழில்சார் தகுதிகள் :-**

(i) தனியார்/வாடகை வாகனங்கள் மற்றும் தாரின் நிறை 24 அந்தரிலும் குறைவான 'ஸ்டேஷன் வகன்' வாகனங்கள் ஓட்டுவது பற்றி மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் அவர்களால் வழங்கப்பட்ட (குறித்த வாகனங்கள் ஓட்டக்கூடிய) திறமை பெற்றவர் என்பதை நிரூபிக்கக்கூடிய சான்றிதழை பெற்றிருக்க வேண்டும். (குறித்த நபரை சேவைக்குச் சேர்த்துக்கொள்ளும் தினத்துக்கு 3 வருடங்களுக்கு முன்பு குறைந்த பட்சம் மோட்டார்வாகன போக்குவரத்து ஆணையாளர் அவர்களால் வழங்கப் பட்டுள்ள சீ (C) மற்றும் சீ (C) வாகனப் பிரிவில் அனுமதிப்பத்திரம் அல்லது புதிய சாரதிக்குரிய அனுமதிப்பத்திரத்துக்கு ஏற்ப பி (B) பிரிவில் அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றிருத்தல்).

(ii) தாரின் நிறை 34 அந்தரிலும் கூடிய பாரத்தைக் கொண்ட மோட்டார் வண்டி, பாரமுள்ள டிரேலர் மற்றும் 32 பிரயாணிகளுக்குக் கூடிய எண்ணிக்கையை கொண்டு செல்லக்கூடிய பஸ் வண்டிகளுக்கான சாரதி அனுமதிப் பத்திரம் ஒன்றைப் பெற்றிருத்தல் (குறித்த நபரை வேலைக்குச் சேர்த்துக் கொள்ளும் தினத்துக்கு 03 வருடங்களுக்கு முன் குறைந்த பட்சம் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அவர்களால் வழங்கப்பட்டுள்ள ஏ (A) வாகனப் பிரிவின் அனுமதிப் பத்திரம் ஒன்று.

3. **அனுபவம் :**

மோட்டார் வாகனத்தை ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரம் கிடைத்த பின் குறைந்த பட்சம் 3 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். (அனுபவத்தை சான்றிதழ் மூலம் நிரூபித்தல் வேண்டும்)

4. **உடல் ரீதியான தகுதிகள் :**

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் நன்கு பார்வையுள்ளவர்காளாக இருத்தல் வேண்டும். அதேவேளை அவர் பகல் காலங்களிலும் இராக் காலங்களிலும் சேவையில் ஈடுபடக்கூடியவாறு தேவையான அளவில் உளவியல் மற்றும் உடலியல் ரீதியிலான தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) குறைந்த பட்ச உயரம் 5 அடி 2 1/2 அங்குலம் இருத்தல் அவசியம்.

5. **சேவையில் இணைத்துக்கொள்வதற்கான நிபந்தனைகள் :**

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ii) விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் திகதிக்கு 3 வருடங்களுக்கு உக்குவெளை பிரதேச சபையின் எல்லைக்குள் ஒரு நிரந்தரக் குடியிருப்பாளராக இருத்தல் வேண்டும்;

(iii) பெருந் தெருக்கள் சட்டக் கோவை பற்றி நன்கு அறிந்திருத்தல் வேண்டும்;

(iv) இதற்காக ஆட்களை சேர்த்துக் கொள்வதற்காக தேவையான அனைத்து தகுதிகள் இருத்தல் வேண்டும். அந்த தகுதிகள் அனைத்தையும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவிப்பில்/வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் எல்லா வகையிலும் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்;

(v) விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதியில் 18 வயதுக்கு குறைந்தவராக அல்லது 45 வயதிலும் கூடியவராக இருத்தல் கூடாது. (தற்போது உக்குவெளைப் பிரதேச சபையில் சேவையில் ஈடுபட்டு நிரந்தர பதவியில் உள்ளவர்கள் விடயத்தில் உச்சகட்ட வயதெல்லை கணக்கில் எடுக்கப்படமாட்டாது.);

(vi) உக்குவெளை பிரதேச சபையில் தற்போது தற்காலிக அமய பதில் அல்லது ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபட்டுள்ள சேவையாளர் விடயத்தில் முன் உரிமை அளிக்கப்படும்;

(vii) விண்ணப்பதாரி நற்பண்புகளைக் கொண்டவராகவும், நல்ல உடல் ஆரோக்கியம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் அவர் தண்டனைச் சட்டக் கோவையின் அடிப்படையில் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டு தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது;

(viii) அரச/உள்ளூராட்சி அல்லது கூட்டுத்தாபனம் ஒன்றில் இருந்தும் பதவி நீக்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

6. **ஆட்சேர்த்துக் கொள்ளும் முறை :**

எழுத்து மூலப் பரீட்சை ஒன்றின் பெறுபேறு அடிப்படையில் உயர் புள்ளிகளை பெற்ற விண்ணப்பதாரிகளில் இருந்து தொழில் ரீதியான பரீட்சை ஒன்றின் பெறுபேற்றின் அடிப்படையில் தேவையான அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ள

விண்ணப்பதாரிகளிடம் இருந்தும் உயர் புள்ளிகளை பெற்றவர்களிடம் இருந்தும் திறமைகளின் அடிப்படை ஒழுங்கில் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்படும்.

**7. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இது நிரந்தரமானதாகும். ஓய்வூதிய சம்பளத்தை உடையதாகும்.

(ii) விதவை/தபுதாரர் மற்றும் அநாதைப் நிதியத்துக்கான பங்களிப்பு செய்ய வேண்டும்.

(iii) இந்த நியமனம் 3 வருட கால தகுதிகாண் காலத்தைக் (Probation period) கொண்டதாகும்.

(iv) இவ்வாறான ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் மற்றும் சட்ட விதிகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் சட்ட விதி முறைகளுக்கும் அரச திணைக்களங்களின் கட்டளைகளுக்கும் மத்திய மாகாண சபை அல்லது மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் காலத்துக்காலம் வெளியிடப்படும் ஏனைய நிபந்தனைகளுக்கும் ஏற்ப செயற்படுவதற்கு அனைத்து ஊழியர்களும் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

**8. விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஏனைய ஆவணங்கள்:**

(i) குறித்த ஒரு முறையிலான நேர்முகப் பரீட்சையின் மூலம் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்;

(ii) விண்ணப்பப்படிவத்துடன் கீழ் வரும் நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகளை இணைத்து அனுப்பப்படல் வேண்டும். அவற்றின் மூலப் பிரதிகளை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(a) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
(b) கல்வித் தகைமை அத்தாட்சிப் பத்திரம்
(c) தாம் வசிக்கும் இடம் பற்றி பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம்
(d) அண்மையில் பெறப்பட்ட 2 நற்சாட்சிப் பத்திரங்கள் (அதில் ஒன்று குடியிருக்கும் பிரிவிலுள்ள கிராம அதிகாரியிடம் இருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.)
(e) மோட்டார் வாகன போக்குவத்து ஆணையாளர் நாயகம் அவர்களால் வழங்கப்பட்ட சாரதிப் பதவிக்காகத் தேவையான மோட்டார் வண்டிகளை ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரம்.
(f) தொழில் ரீதியான அல்லது அனுபவம் பற்றிய சான்றிதழ் (அரசாங்கத்தின் அல்லது மாகாண அரச சேவையில் அல்லது உள்ளூராட்சி சேவையில் பணிபுரியும் ஊழியர்களாக இருப்பின் விண்ணப்பப்படிவங்கள் திணைக்களத் தலைவர் மூலம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

9. அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் வாய் மூலப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

**10. விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை கடித உறை ஒன்றில் இட்டு கோரப்படும் பதவியை கடித உறையின் இடதுப்பக்க மேல் மூலையில் எழுதி 2017.11.05 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கும்படி 'செயலாளர், பிரதேச சபை, உக்குவளை' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (தற்போது மாகாண அரச சேவையில் தொழில் புரியும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை நிறுவனத்தின் தலைவர் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.) குறித்த திகதிக்கு பின் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் கோரப்பட்ட பின் அல்லது கோரப்படும் கால இடைவெளியில் இந்த ஆட்சேர்ப்பை தாமதப்படுத்தல் அல்லது மாற்றி அமைத்தல் அல்லது இந்த அறிவித்தலை இரத்து செய்தல் அல்லது அதை திருத்தி அமைக்கும் முழு அதிகாரமும் உக்குவளை பிரதேச சபையின் செயலாளருக்கு உரித்தாகும்.

ஆர். ஜே. என். ஜயசிங்க,
செயலாளர்,
உக்குவளை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
உக்குவளை,
2017, செப்தெம்பர் 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**உக்குவளை பிரதேச சபையில் வெற்றிடமாக உள்ள ......................................... பதவிக்கான விண்ணப்பம்**

1. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் : ..........................................................................

2. முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................

3. நிரந்தர விலாசம் : ..........................................................................

4. நிரந்தர வதிவிட மாவட்டம் : ..........................................................................

5. பிறந்த திகதி :
ஆண்டு :.................... மாதம் : .................... திகதி : ................................

6. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது : ..........................................................

7. தேசிய ஆள்அடையாள அட்டை இலக்கம் : ..........................................................................

8. சிவில் அந்தஸ்து (விவாகமானவர்/விவாகமாகாதவர்) : ..........................................................

9. பால் (ஆண்/பெண்) : ..........................................................................

10. நீர் இலங்கைப் பிரசை என்ற அந்தஸ்தைப் பெறுவது பரம்பரையாகவா? பதிவு மூலமா ? என்ற விபரம்: ....................

11. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்) :
க.பொ.த. (சா.த.) பரீட்சை :
தோற்றிய ஆண்டு : ........................................... சுட்டிலக்கம் : ...................................

| தொடர் இல. | பாடம் | தரம் | தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9 | | |
| 5. | | | 10. | | |

க.பொ.த. (உ.த.) பரீட்சை :
தோற்றிய ஆண்டு : ............................................... சுட்டிலக்கம் : ...................................

| தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

12. ஏனைய கல்வித் தகைமைகள் : ..........................................................................................

13. தொழில் தகைமைகள் :

(i) தொழில்சார் அனுபவம் : ..........................................................................................

(ii) தற்போது தொழில் புரியும் நிறுவனம் : ..........................................................................................

(iii) தற்போது வகிக்கும் பதவி : ..........................................................................................

(iv) இப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி : ..........................................................................................

(v) இதற்கு முன் தொழில் புரிந்த நிறுவனங்கள் மற்றும் பதவிகள் : ..........................................................

14. நீங்கள் தற்போது இந்த சபையில் சேவை புரிகின்றவராயின் : ..........................................

(i) தற்போது வகிக்கும் பதவி : .....................................................................

(ii) நிரந்தர/பதில்/தற்காலிக/ஒப்பந்த அடிப்டை போன்ற விடயம் : ..............................

(iii) இப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி : ....................................................................

15. நீர் எப்பொழுதாவது குற்றச்சாட்டு ஒன்றின் பேரில் நீதிமன்றத்தினால் குற்றவாளி எனத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா? ..........................................................................................................................

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சகல தகவல்களும் எனது அறிவுக்கு எட்டிய வகையில் சரியானவை என உறுதியளிக்கிறேன். மேலுள்ள தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என நிரூபிக்கப்படுமிடத்து நான் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு முன் தெரியவரின் தகுதியற்றவனாவேன் எனவும் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின் தெரியவரின் எந்தவித நட்டஈட்டுக் கொடுப்பனவும் இன்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் எனவும் நான் அறிவேன்.

..........................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ............................................

தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு நிறுவனத் தலைவரின் சான்றிதழ்

திரு./திருமதி/ செல்வி .................................................................................................... தற்போது இந்நிறுவனத்தில் ................................................ ஆக சேவையாற்றுகிறார். இப் பதவிக்கு இவர் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எந்த வகையான தண்டனைகளுக்கும் உட்பட்டதில்லை என சான்று பகர்வதுடன் அவர் சமர்ப்பித்துள்ள விண்ணப்பப் படிவத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கிறேன்.

............................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி : ............................................

10 - 658

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## உடுநுவரபிரதேச சபை

*ஏற்றுக் கொள்ளப்பட்டதுணைவிதிகள் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (நியமத் துணைவிதிகள்) சட்டம்*

*(261 ஆம் அத்தியாயத்தியமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமத்துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9(3) ஆம் உப பிரிவின் படியும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

ஜீ. யூ. குணசிங்க,
செயலாளர்,
உடுநுவர பிரதேச சபை.

பிரதேசசபை அலுவலகம்,
உடுநுவர.
2017, செத்தெம்பர் 9.

### தீர்மானம்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாணசபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் இரண்டாவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய (261 ஆம் அத்தியாயம்) 1952 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் (2) ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் மத்திய மாகாண சபையின், உள்ளூராட்சி விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சருக்கு சாட்டப்பட்டுள்ள தத்ததுவத்தின் படி, மத்திய மாகாணசபையின், உள்ளூராட்சி விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் ஆக்கப்பட்டதும் 2016.02.23 ஆம் திததிய 1955/7 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் IV (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்டதும் மத்திய மாகாண சபையினால் அனுமதிக்கப்பட்டு 2017.05.05 ஆந் திகதி 2017/42 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி IV (அ) இல் பிரசுரிக்கப்பட்டதுமான அறிவித்தலில் பிரகடனப்படுத்தப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்டுள்ள துணைவிதிகளான:*

1. *பிரதேச சபை எல்லைக்குள் கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கான திட்டங்களை பரிசீலனை செய்வதற்கும் கட்டணங்கள் அறவிடுவதற்குமான துணைவிதிகள்*
2. *சேவைகள் சம்பந்தமான கட்டணங்கள் அறிவிடுவதற்கான துணைவிதிகள்*
3. *முச்சக்கரவண்டிகள் நிறுத்தி வைப்பதுதொடர்பான துணைவிதிகள்*
4. *பொதுநூலகம் தொடர்பான துணைவிதிகள்*
5. *நடமாடும் வியாபாரம் சம்பந்தமான துணைவிதிகள்*
6. *வரிஅறவிடுதல் செயற்பாடுகளுக்காக பருவஅறிக்கைகள் மற்றும் விபரங்கள் பெற்றுக் கொள்வதற்கான துணைவிதிகள்*
7. *தீங்கு விளைவிக்கும் வியாபாரங்கள், ஆபத்தான வியாபாரங்கள், மற்றும் தீங்கு விளைவிக்கும் ஆபத்தான வியாபாரங்கள் தொடர்பாக துணைவிதிகள்*
8. *மீன் விற்பனை தொடர்பான துணைவிதிகள்*
9. *பிரதேச சபைகளின் பொதுச்சந்தை தொடர்பான துணைவிதிகள்*
10. *அலங்கரித்தலை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் தொடர்பான துணைவிதிகள்*

11. பொது மலசலகூடங்களை பாவிப்பதை ஒழுங்குபடுத்துதல் தொடர்பான துணைவிதிகள்

12. விளம்பர அறிவித்தல்கள் தொடர்பான துணைவிதிகள்

13. கால்நடைப் பண்ணைகள் நிர்வகித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் தொடர்பான துணைவிதிகள்

14. வாடகை வாகனங்கள் நிறுத்தி வைத்தல் தொடர்பான துணைவிதிகள்

15. இறைச்சி விற்பனை தொடர்பான துணைவிதிகள்

16. தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பான துணைவிதிகள்

17. மடுவங்கள் தொடர்பான துணைவிதிகள்

18. பிரதேச சபை பாதைகளில் செலுத்தப்படும் வாகனங்களின் நிறை மற்றும் வேகத்தை கட்டுப்படுத்துவது தொடர்பான துணைவிதிகள்.

இத்தீர்மானம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற தினத்தில் இருந்து நடைமுறைப்படுத்துவதற்கும் இதற்கு முன் தினம் நள்ளிரவு 12 மணியிலிருந்து இதற்கு முன்னர் மேலே குறிப்பிடப்பட்டவைகளுக்கு உரிய துணைவிதிகள் சம்பந்தமாக உடுநுவர பிரதேச சபை எல்லைக்குள் நடைமுறையில் இருந்த அனைத்துத் துணைவிதிகளையும் இரத்தச்செய்வதற்கும் 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 9(3) ஆம் உப பிரிவின் படி எனக்களிக்கப்பட்ட தத்துவத்தின் அடிப்படையில் 2017.09.11 ஆந் திகதி சபையின் 08 ஆம் இலக்க தீர்மானத்தின் கீழ் தீர்மானிக்கிறேன்.

*10-509*

---

**கண்டி மாநகர சபை**

வரவு செலவு திட்டம் - 2018

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 212 (ஆ) ஆம் பிரிவின்படி 2018 ஆம் நிதி ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் மாநகரசபை கட்டளைச்சட்டத்தின் 286 (அ) பிரிவின் கீழ் 2017 நவெம்பர், 1 ஆந் திகதி தொடக்கம் ஏழு (7) நாட்களுக்கு பொது மக்களின் பரிசீலனைக்காக கண்டி மாநகர சபையின் நிர்வாக கடமைகளை மேற்கொள்ளுவதற்கும் பராமரிப்பதற்குமான அதிகாரம் பெற்றுள்ள மாநகர சபை ஆணையாளர் சந்தன தென்னகோன் ஆகிய என்னால் கீழ்க் காணும் அலுவலகங்களில் வரவு செவு திட்ட அறிக்கை-2018 பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

1. கண்டி மாநகரசபை ஆணையாளர் அலுவலகம்
2. பிரதம கணக்காளர் அலுவலகம் மாநகர சபை, கண்டி
3. டீ. எஸ். சேனநாயக்க ஞாபகார்த்த பொதுநூலகம், கண்டி

சந்தன தென்னகோன்,
மாநகர ஆணையாளர்,
கண்டி மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கண்டி,
2017, ஒற்றோபர் 1.

*10-591*

**மாத்தறை மாநகர சபை**

வரவு செலவுத் திட்டப் பேரேடு - 2017

*2017 ஆம் ஆண்டுக்கான திட்டமிடப்பட்ட கருத்திட்டங்களின் வரவு செலவுத் திட்ட பேரேடு 2017.10.20 ஆந் திகதியிலிருந்து ஏழு (07) நாட்களுக்கு பொது மக்கள் பரிசீலனைக்காக மாத்தறை மாநகர சபை அலுவலகத்தில் வெளிப்படையாக வைக்கப்பட்டிருக்கும் என்பதை மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 214 (2) ஆம் அதிகாரத்தின் கீழ் இத்தால் மூலம் அறியத்தருகின்றேன்.*

சேனக்க பல்லியகுருகே,
*மாநகர ஆணையாளர்,*
*மாத்தறை.*

*மாநகர சபை அலுவலகம்,*
*மாத்தறை,*
*2017, ஒற்றோபர் 20.*

*10-659*

---

**மாத்தறை மாநகர சபை**

வரவு செலவுத் திட்டப் பேரேடு - 2018

*2018 ஆம் ஆண்டுக்கான திட்டமிடப்பட்ட கருத்திட்டங்களின் வரவு செலவுத் திட்ட பேரேடு 2017.10.27 ஆந் திகதியிலிருந்து ஏழு (7) நாட்களுக்கு பொது மக்கள் பிரிசீலனைக்காக மாத்தறை மாநகர சபை அலுவலகத்தில் வெளிப்படையாக வைக்கப்பட்டிருக்கும் என்பதை மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 212 (ஆ) பிரிவின் கீழ் இத்தால் அறியத்தருகின்றேன்.*

சேனக்க பல்லியகுருகே,
*மாநகர ஆணையாளர்,*
*மாத்தறை.*

*மாநகர சபை அலுவலகம்,*
*மாத்தறை,*
*2017, ஒக்டோபர் 27.*

*10-660*

---

**மாத்தறை மாநகர சபை**

வரிக் கட்டணம் அறவிடல் - 2018

*(252 ஆம் அத்தியாயத்தின் கீழ் மாத்தறை மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் படி வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் மாத்தறை மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் xii ஆம் பகுதியின் 230ஆம் பிரிவின்படி மாநகர சபை எல்லைக்குள் 2011 ஆம் ஆண்டின் விலை மதிப்பின்படி 2018 ஆம் ஆண்டின் நடைமுறைப்படுத்தப்படும் விதமான வியாபார மற்றும் வணிக செயற்பாட்டிற்கான பாவனைக்கு உட்படும் இடங்களுக்கு நூற்றுக்கு 12% வரிமதிப்பு வரியையும், ஏனைய சொத்துக்களுக்கு 5% வரிமதிப்பு வரியையும், 2018 ஆம் வருடத்திற்கு விதித்து அறவிடப்படவும் 2017.06.19 ஆந் திகதி நடைபெற்ற நகர ஆணையாளரின் தீர்மான புத்தகத்தின்*

தீர்மான இலக்கம் 2177 இன் கீழ் ஏகமனதாக ஏற்றுக்கொண்டதாகவும், அதன் படி கீழே குறித்த விதத்தில் வரி அறவிடவென தீர்மானித்தாகவும் இத்துடன் அறியத்தருகின்றேன்.

1. முறைப்படி மாச்சு மாதம் 31, யூன் மாதம் 30, செத்தெம்பர் மாதம் 30, திசெம்பர் மாதம் 31 ஆம் திகதிகளில் அல்லது முன்னர் முடிவறும் விதத்தில் நான்கு தவணைகளாக செலுத்தி முடிக்கலாம்.

2. 2018 ஆம் ஆண்டுக்கான வரிக் கட்டணத்தை அவ்வருடத்தின் சனவரி 31 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் முழு வருடத்திற்குமான வரியை முழுதாக கட்டி முடிப்பதாயின் வரிப்பணத்தில் நூற்றுக்கு 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு தவணைக்குமான வரியை தவணைக் கால ஆரம்பத்தில் கட்டி முடிப்பதாயின் (5% ) கழிவும் வழங்கப்படும்.

3. மேலே 1 இல் குறித்த திகதிகளின் பின் வரிமதிப்புப் பணம் செலுத்தப்படுமிடத்து காணி வதிவிடம், சொத்துக்கள் போன்றவற்றிற்கு நூற்றிற்கு (15%) தண்டப் பணமும் ஏனைய சொத்துக்களுக்கு நூற்றுக்கு (20%) மேலதிக தண்டப் பணமும் அறவிடப்படும்.

சேனக்க பல்லியகுருகே,
மாநகர ஆணையாளர்,
மாத்தறை.

மாநகர சபை அலுவலகம்,
மாத்தறை,
2017, செத்தெம்பர் 19.

10 - 661

# நானாவித அறிவித்தல்கள்

## பண்டாரவளை மாநகர சபை

### வியாபார அனுமதிப் பத்திரங்களுக்கான அறவீடு - 2018

1947 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 247(அ) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி பண்டாரவளை மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட வர்த்தக தாபனங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் பொருட்டு அவ்வாறான தானங்களின் வருடாந்த பெறுமதிக்கமைவாக அறவிடுவதற்காக மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 286 "அ" ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தீர்மானிக்கப் பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மேலும் இவ் அனுமதிப்பத்திர கட்டணங்கள் 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பு பண்டாரவளை மாநகர சபைக்கு செலுத்தி சம்பந்தப்பட்ட வியாபாரத்திற்கான அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

சட்டதரணி எஸ். பி. உடோவிட (இ. நி. சே. I ),
மாநகர ஆணையாளர்,
பண்டாரவளை.

மாநகர சபை அலுவலகம்,
பண்டாரவளை,
2017, ஒற்றோபர் 2.

**அட்டவணை**

| நிரல் I | | நிரல் II | | |
|---|---|---|---|---|
| தொ. இல. | வியாபார வர்த்தக தாபனங்கள் | வருடாந்த பெறுமதி ரூ. 1,500 அல்லது அதற்கு குறைந்த | வருடாந்த பெறுமதி ரூ. 1,500 இலிருந்து ரூ. 2,500 வரை | வருடாந்த பெறுமதி ரூ. 2,500 இக்கு மேல் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 1. | பூசைகள் சம்பந்தமான பொருட்கள் வியாபார தாபனத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 2. | வாஸ்து, ஜோதிடம் பார்க்கும் நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 3. | மளிகை மொத்த அல்லது சில்லறை வியாபார தானத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 4. | தைத்த ஆடைகள் அல்லது துணி வகைகளை விற்பனை செய்தல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 5. | சுற்றுலா ஹோட்டல் அல்லது விருந்தினர் விடுதி ஒன்றை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 6. | தேனீர்சாலை அல்லது போசணசாலையை நடத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 7. | கட்டிடப் பொருட்களை சந்தைப்படுத்தும் தாபனத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 8. | வீட்டுத் தளபாடங்கள் சந்தைப்படுத்தும் தாபனத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 9. | கணிணிப் பாடசாலைகள் நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 10. | இயற்கைப் பூக்கள் வியாபார நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 11. | தொலைத் தொடர்பு நிலையங்கள் நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 12. | ஸ்டிக்கர் வெட்டி ஒட்டும் வியாபாரத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 13. | முடி வெட்டுதல் மற்றும் சிகையலங்காரம் செய்யும் தாபனத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 14. | மின் உபகரணங்களை சந்தைப்படுத்தும் ஸ்தாபனம் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 15. | பாடசாலை புத்தகங்கள் மற்றும் காகிதாதிகள் விற்கும் தாபனத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 16. | வைத்திய பரிசோதனைக் கூடம் ஒன்றை நடாத்தல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 17. | பாதணிகள் சந்தைப்படுத்தும் நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 18. | பழவகை பானங்களைச் சந்தைப்படுத்தும் வியாபாரத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 19. | தங்கநகை வியாபாரம் நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 20. | பொருட்கள் மற்றும் அலங்கார பொருட்கள் வியாபாரம் செய்தல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 21. | தேசிய ஔடத வியாபார நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 22. | ஆங்கில மருந்து வியாபார தாபனத்தை நடத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 23. | தட்டச்சு மற்றும் ரோனியோ இயந்திரம் பழுதுபார்க்கும் நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 24. | கண் கண்ணாடி வியாபார நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 25. | எரிவாயு விற்பனை நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 26. | அழகுபடுத்தும் நிலையம் நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 27. | வெதுப்பக வியாபாரம் நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 28. | வாகனங்கள் திருத்தும் நிலையம் நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 29. | அதிஷ்டலாப சீட்டுகள் விற்பனை நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 30. | பழங்கள் விற்பனை நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 31. | இனிப்புப் பண்டங்கள் விற்பனை நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 32. | கடிகாரம் பழுதுபார்க்கும் நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 33. | குருந்தகடுகள் வாடகைக்கு விடல் மற்றும் விற்பனை செய்யும் நிலையத்தை நடத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 34. | கையடக்கத் தொலைபேசி விற்றல் மற்றும் திருத்தும் நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 35. | மரக்கறி சில்லறை வியாபாரம் நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 36. | மரக்கறி மொத்த வியாபாரம் நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 37. | மின்சார உபகரணங்கள் திருத்துமிட நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 38. | மின்கலங்கள் மின்னேற்றும் ஸ்தாபன நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| நிரல் I | | நிரல் II | | |
|---|---|---|---|---|
| தொ. இல. | வியாபார வர்த்தக தாபனங்கள் | வருடாந்த பெறுமதி ரூ. 1,500 அல்லது அதற்கு குறைந்த | வருடாந்த பெறுமதி ரூ. 1,500 இலிருந்து ரூ. 2,500 வரை | வருடாந்த பெறுமதி ரூ. 2,500 இக்கு மேல் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 39. | பல் சிகிச்சை நிலையம் நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 40. | புகைப்பட நிலையம் நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 41. | பழைய இரும்பு சாமான்கள் சேகரிக்கும் தாபன நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 42. | விழா உபகரணங்கள் வழங்கும் மற்றும் அலங்கரிக்கும் நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 43. | மோட்டார் சைக்கிள் விற்கும் மற்றும் பழுதுபார்க்கும் நிலையத்தை நடத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 44. | மரப் பலகைகள் சந்தைப்படுத்தும் நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 45. | வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 46. | வாகனங்கள் கழுவுமிடத்தை நடாத்தல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 47. | விளையாட்டு உபகரணங்கள் விற்கும் நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 48. | கணினி விற்றல் மற்றும் பழுதுபார்த்தல் நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 49. | பீங்கான் பொருட்கள் விற்பனை நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 50. | அலங்கார மீன்கள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 51. | இணையத் தள வசதிகள் வழங்கும் நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 52. | அச்சிடும் வியாபார நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 53. | பாடல்கள் பதிவு செய்யும் வியாபார நிலையத்தை நடத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 54. | ஆயுர்வேத மற்றும் தேசிய வைத்திய மத்திய நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 55. | விவசாய மற்றும் இரசாயன பொருட்கள் வியாபார நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 56. | தேங்காய் எண்ணெய் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 57. | உடல் பயிற்சி நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 58. | கணினி மை விற்பனை செய்யும் வியாபார நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 59. | இயந்திர எண்ணெய் விற்கும் நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 60. | மிதி வண்டிகள் விற்கும் மற்றும் திருத்தும் நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 61. | வெற்றிலை பாக்கு விற்பனை நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 62. | மின் பிறப்பாக்கி இயந்திர விற்பனை நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 63. | திரைப்பட அரங்கு நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 64. | பாதணிகள் பழுது பார்க்கும் நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 65. | தேயிலைத் தூள் விற்கும் நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 66. | சங்கீத உபகரணங்கள் வாடகைக்கு விடும் நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 67. | மாட்டிறைச்சி விற்பனை நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 68. | ஆட்டிறைச்சி விற்பனை நிலையத்தை நடாத்துதல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 69. | கோழி இறைச்சி விற்பனை நிலையத்தை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 70. | மீன் விற்பனை நிலையத்தை நிலையத்தை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 71. | கோழி உர விற்பனை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 72. | பன்றிப் பண்ணை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 73. | கோழிப் பண்ணை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 74. | வாகனப்புகை பரிசீலனை செய்யும் நிலையத்தை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 75. | அலுமினியம், பிளாஸ்டிக் பொருள் விற்பனை நிலையத்தை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 76. | மிருக உணவு விற்பனை நிலையத்தை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 77. | கண்ணாடி மற்றும் கண்ணாடிப் பொருட்கள் விற்பனை நிலையத்தை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| நிரல் I | | நிரல் II | | |
|---|---|---|---|---|
| தொ. இல. | வியாபார வர்த்தக தாபனங்கள் | வருடாந்த பெறுமதி ரூ. 1,500 அல்லது அதற்கு குறைந்த ரூபா ச. | வருடாந்த பெறுமதி ரூ. 1,500 இலிருந்து ரூ. 2,500 வரை ரூபா ச. | வருடாந்த பெறுமதி ரூ. 2,500 இக்கு மேல் ரூபா ச. |
| 78. | பல் பொருத்தும் தொழில்நுட்ப நிலையத்தை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 79. | கொரியர் தபால் சேவை நிலையத்தை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 80. | தேசிய பொருட்கள் விற்பனை நிலையத்தை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 81. | வாகன வர்ணபூச்சுக்கள் விற்கும் நிலையத்தை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 82. | படங்கள் சட்டமிடும் வியாபார நிலையத்தை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 83. | ஜஸ்கிரீம் விற்பனை நிலையத்தை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 84. | புதினப் பத்திரிகைகள் விற்கும் நிலையத்தை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 85. | தகர வேலைகள் செய்யும் நிலையத்தை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 86. | கருவாடு சந்தைப்படுத்தும் வியாபார நிலையத்தை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 87. | முகவர் தபால் நிலையம் நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 88. | டயர் டியுப் புனரமைக்கும் நிலையத்தை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 89. | இரசாயன உரங்கள் விற்கும் மற்றும் களஞ்சியப்படுத்தும் நிலையத்தை நடாத்துல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 90. | அரியப்பட்ட பல்கை கஸஞ்சியப்படுத்தும் மற்றும் விற்பனை செய்யும் நிலையமொன்றை நடாத்தல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 91. | பிறநாட்டு மதுசார விற்பனை நிலையத்தை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 92. | தைத்த ஆடைகள் வாடகைக்கு வழங்கும் நிலையத்தை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 93. | டிஜிட்டல் தொழில்நுட்ப அச்சிடும் நிலையத்தை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 94. | வானொலி, தொலைக்காட்சி திருத்துமிட நிலையத்தை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 95. | மோட்டார் வாகனங்கள் விற்பனை நிலையத்தை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 96. | மாணிக்கக் கல் விற்பனை நிலையத்தை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 97. | வர்ணம் பூசும் நிலையத்தை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 98. | விநியோக முகவர் நிலையத்தை நடாத்துதல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
| 99. | எரிபொருள் விநியோக நிறுவனத்தை அல்லது நிலையத்தை நடாத்துதுல் | 2000 0 | 3000 0 | 5,000 0 |
